රාජ්‍ය පරිපාලන, පළාත් සභා සහ පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.

**இணைந்த சேவைகள் பிரிவு**
சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.

**Combined Services Division**
*Independence Square, Colombo 07, Sri Lanka*

දුරකතනය / தொலைபேசி: 011- 2696211-13 **Telephone**
ෆැක්ස් / தொலைநகல்: 011- 2695279 **Fax**
ඊ- මේල් / மின்னஞ்சல்: info@pubad.gov.lk **E-mail**
වෙබ් අඩවිය / இணையத்தளம்: www.pubad.gov.lk **Web Site**

මගේ අංකය / எனது இல / **My No**: CS/VII/GTS/EB

ඔබේ අංකය / உமது இல / **Your No**:

දිනය / திகதி / **Date**: 2025.08.29

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்/ ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்/ மாவட்டச் செயலாளர்கள்/ பிரதேச செயலாளர்கள்

**<u>அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடல்</u>**

அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளின் பெறுபேறுகள் இவ் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன் அதற்கு மேலதிகமாக ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் தனித்தனியாக அறியத் தரப்படுகின்றது.

02. தனித்தனியாக உத்தியோகத்தர்களிடம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளின் பெறுபேறுகளை வெளியிடுவது நேர விரயமான அத்தியாவசியமற்ற மற்றும் மேலதிக செலவினை ஏற்படுத்தும் நடவடிக்கையென அடையாளம் காணப்பட்டுள்ளது. தாபனத் தலைவர்களும் உத்தியோகத்தர்களின் தாபன நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் தனித்தனியாக வெளியிடப்படும் பெறுபேற்றின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு பழகியுள்ளமையினால் ஏதேனும் காரணத்தினால் பெறுபேற்றினை உள்ளடக்கிய கடிதம் தொலைந்து போயின் மீண்டும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் போது தேவையற்ற காலதாமதம் ஏற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் பின்வரும்படி நடவடிக்கை எடுக்கவென தயவுடன் தெரிவிப்பதுடன் எதிர்காலத்தில் அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் மற்றும் அலுவலக மட்டத்தில் தனித்தனியாக வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடப்படமாட்டாதென தயவுடன் தெரிவிக்கின்றேன்.

I. இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும் அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளின் பெறுபேறுகள் தற்போது நடைபெறும் விதமாக இவ் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

II. அவ் பெறுபேற்று ஆவணத்தின் பிரகாரம் குறித்த பரீட்சைக்கு தோற்றி, உங்களின் தாபனத்தில் சேவையாற்றும் அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு உங்களின் கையெழுத்துடன் கூடிய பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுங்கள். உத்தியோகத்தரை நிரந்தரமாக்குதல், தரமுயர்த்தல் போன்ற தாபன நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கும் போது குறித்த ஆவணங்களுடன் அவ் கடிதத்தின் சான்றுரைப்படுத்தப்பட்ட பிரதியொன்றை என்னிடம் அனுப்புவது போதுமானதாகும்.

III. அமைச்சின் இணையத்தளத்தில் மூலம் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தரின் பெயரை உள்ளடக்கிய பெறுபேற்று ஆவணத்தை உங்களால் சான்றுரைப்படுத்தப்பட்ட புகைப்படபிரதியொன்றினையும் உத்தியோகத்தரின் தனிப்பட்ட ஆவணக்கோப்பிற்கு கட்டாயமாக உள்வாங்குதல் வேண்டும்.

IV. தற்போது நடைபெறும் விதமாக வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளின் பெறுபேறுகள் இவ் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதினால் அது தொடர்பில் குறித்த உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட கவனத்தை செலுத்த வேண்டுமென அவ் உத்தியோகத்தர்களை அறிவுறுத்துங்கள்.

03. தற்போது இவ் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ள 2024.09.29 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு Iஇன் உத்தியோகத்தர்களின் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளின் பெறுபேறுகள் தொடர்பிலும் மேற்படி ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுங்கள்.

04. உங்களின் வசதிக்காக அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பின் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை சித்தியடைதல்/ சித்தியடையாமை தொடர்பில் தீர்மானமெடுக்கும் முறையை இத்துடன் உள்ள இணைப்பு 01இன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒப்பம்./என்.யு. நிஷான் மெண்டிஸ்
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

இணைப்பு 01

**அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு Iற்குரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை**

இலக்கம் 829/7 மற்றும் 1994.07.26 ஆந் திகதிய சேவைப் பிரமாணக்குறிப்பின் பின்னிணைப்பு "உ"

| **வினாத்தாள் இலக்கம் 1** | **மொத்த புள்ளிகள்** | **சித்தியடைந்த புள்ளிகள்** |
|---|---|---|
| i. பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பந்தி<br><br>ii. (அ) உத்தியோகபூர்வ ஆவணமொன்றின் அல்லது அறிக்கையிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகள் மற்றும்<br>(ஆ) பத்திரிகையில் அல்லது அறிக்கையிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகள்<br>பின்வரும் முறைகளுள் ஒன்றில் மொழிபெயர்த்தல்<br>1. சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு<br>2. சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு<br>3. தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு | 100 | 40 |
| **வினாத்தாள் இலக்கம் 2** | | |
| i. பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பந்தி<br><br>ii. (அ) உத்தியோகபூர்வ ஆவணமொன்றின் அல்லது அறிக்கையிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகள் மற்றும்<br>(ஆ) பத்திரிகையில் அல்லது அறிக்கையிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகள்<br>1. தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு<br>2. ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு<br>3. ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு | 100 | 40 |